# நடப்பு நிகழ்வுகள்- ஜனவரி 15 & 16 - 2017

❖ தமிழக அரசு 2017 விருது தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் அவர்களால் 2017 ஜனவரி 15 திருவள்ளுவர் திருநாளன்று வழங்கப்பட்டது.

- திருவள்ளுவர் விருது (2017) – புலவர் பா. வீரமணி
- பெரியார் விருது (2016) – பன்ருட்டி ராமச்சந்திரன்
- அம்பேத்கர் விருது (2016) – மருத்துவர் ரா.துரைசாமி
- அண்ணா விருது (2016) – கவிஞர் கூரம் மு.துரை
- காமராஜர் விருது (2016) – டி நீலகண்டன்
- பாரகியார் விருது (2016) – கவிஞர் கோ. பாரதி
- திரு.வி.க. விருது (2016) – பேராசிரியர் மறைமலை இலக்குவனார்
- கி.ஆ.பெ. விசுவநாதம் விருது (2016) – மீனாட்சி முருகானந்தம்

❖ முல்லை பெரியாறு அணையைக் கட்டிய பென்னி குயிக் பிறந்த தினம் ஜனவரி 14 அன்று கொண்டாடப்பட்டது.

❖ டிஜிட்டல் பணபரிவர்த்தனையை ஊக்குவிக்கும் வண்ணம் மத்திய பிரதேச அரசு "டிஜிட்டல் டாகியா" (Digital Dakiya) எனப்படும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ இஸ்ரேல் - பாலஸ்தீன நாடுகளிடையேயான அமைதி பேச்சுவார்த்தை பிரான்சு தலைநகர் பாரிஸில் துவங்கியுள்ளது.

❖ 62 வது ஃபிலிம் பேர் விருதுகளில் சிறந்த திரைப்படத்திற்கான விருது "டங்கல்" (Dangal) திரைப்படம் பெற்றுள்ளது.

❖ "அட்லாண்டிக் கவுன்சில்" (Atlantic Council) எனப்படும் சர்வதேச அமைப்பின் தலைமையிடம் அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் டீசியில் உள்ளது. சமீபத்தில் இவ்வமைப்பின் மூத்த கவுரவ உறுப்பினராக காங்கிரஸ் கட்சியை சார்ந்த மணிஸ் திவாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ ஆசியா – பசிபிக் ஒலிபரப்பு யூனியன் (Asia – Pasific Broad Casting union (ABU))நடத்திய முதல் சர்வதேச நடன திருவிழா ஹைதராபாத்தில் நடைபெற்றது.

❖ "The Karachi Deception"எனும் நூலின் ஆசிரியர் - சத்ருஜீத் நாத்.

- மின் ஆளுமையை மேம்படுத்துவதறிகாக சமீபத்தில் SEZ India எனும் மொபைல் அப்ளிகேசனை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சரவை – வணிகம் மற்றும் தொழில் துறை (Commerce and Industry)
- ஐ.ஐ.டி மாணவர் சேர்க்கையில் பெண்களுக்கு தனியிட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ள குழு – தீமோத்தி கோண்சால்வ்ஸ் (Timothy Gonsalves Committee).
- "An unsuitable boy"என்பது இந்திய திரைப்பட இயக்குநர் கரண் ஜோக்கரின் சுய சரிதை நூலாகும்.
- தில்லியில் நடைபெற்ற 2 – ஆவது பிரிமியர் பாட்மிண்டன் லீக் போட்டியில் பி.வி.சிந்து தலைமையிலான சென்னை ஸ்மாஷர்ஸ் அணி மும்பை ராக்கைட்ஸ் அணியை வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.
- ராஜஸ்தான் மாநிலம் பிகானியரில் 14.01.17 அன்று 24 வது சர்வதேச ஒட்டகத் திருவிழா தொடங்கியது.
- சமீபத்தில் மத்திய ஊரக வளர்ச்சித்துறையிடம் சமூகபொருளாதார மற்றும் ஜாதி கணக்கெடுப்பு (Socio Economic and Caste Census) தொடர்பான தனது அறிக்கையை வழங்கியுள்ள குழு – சுமித் போஸ் குழு.
- இந்திய ராணுவ தினம் ஜனவரி 15 அன்று அனுசரிக்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டில் பல்வேறு தட்பவெப்ப நிலை காரணமாக உயிரிழந்த 1600 பேரில் வெயில் காரணமாக மட்டும் 700 பேர் பலியாகி உள்ளனர் என இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.